# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8069894

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் : ஈரோடு — PS: காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு ஈரோடு — Year: ஆண்டு : 2021 — FIR No.: மு.த.அ. எண் : 1/AC/2021 — Date: நாள் : 05.01.2021

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: by the P.C (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் : —
   Date from : நாள் முதல் : 2020 நவம்பர் மாதம் முதல்
   Date to : நாள் வரை : 29.12.2020 வரை
   Time Period : நேர அளவு :
   Time from : நேரம் முதல் :
   Time to : நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 05.01.2021
   Time : நேரம் : 09.45 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : GD VOL-I
   Time : நேரம் : 05.01.2021 1100 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 4 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் : —
   (b) Address : முகவரி : ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II (பெரிய சேமூர்) அலுவலகம், ஈரோடு.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : —
   District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : A. முரளி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : அண்ணாமலை
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 28.12.1986
   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation : தொழில் : கட்டிட வேலை
   (g) Address : முகவரி : திருமலை வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. செல்வதுரை, பில் கலைக்டர், ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II (பெரிய சேமூர்) அலுவலகம், ஈரோடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு-
இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...M.P.சிவா......... பதவி ...D.S.P.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ஊ.த.க.பிரிவு, ஈரோடு..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A முரளி .05.01.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 05.01.2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 05.01.2021 / 11.30 Hrs

Name: பெயர் ....M.கீதா..........
Rank: நிலை காவல் ஆய்வாளர் எண் ..........
ஊ.த.க.பிரிவு,
ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 01/AC/2021 u/s 7 of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 05.01.2021 தேதி காலை 09.45 மணிக்கு நிலைய அலுலவலில் இருந்தபோது A.முரளி, த/பெ அண்ணாமலை, திருமலை வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல், A.முரளி, த/பெ.அண்ணாமலை, திருமலை வீதி, வீரப்பன் சத்திரம், ஈரோடு. பெறுதல், ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்புத்துறை அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் ஈரோடு, வீரப்பன் சத்திரம், திருமலை வீதியில் எனது குடும்பத்துடன் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். நான் பழைய பில்டிங் உடைக்கும் வேலை செய்து வருகிறேன். எட்டாம் வகுப்புவரை படித்துள்ளேன். எனது மனைவி எம்.புனிதா போஸ்ட் ஆபீசில் தற்காலிக வேலை செய்துவருகிறார். கடந்த 2020ம் வருடம் ஜூன் மாதம் வீரப்பன்சத்திரம், E.P.B நகர் P.P கார்டனில் குடியிருக்கும் (லேட்) தேவராஜனின் மனைவி லதா என்பவரிடமிருந்து அவருக்கு சொந்தமான ஈரோடு தாலுக்கா பெரிய சேமூர் "ஆ" கிராமம் புதிய ரீ.ச.எண் 397/1ல் மொத்தம் 655 சதுர அடியில் உள்ள வீடு மற்றும் அதனை சேர்ந்த காலியிடத்தை ரூ.9,10,000/-க்கு விலைக்கு வாங்கி என்பெயரில் பதிவு செய்தேன். அந்த வீட்டிற்கு என் பெயரில் சொத்துவரி பெயர்மாற்றம் செய்யவும், குடிநீர் இணைப்பு பெறவும், பெரிய சேமூரில் உள்ள மாநகராட்சி அலுவலகம் சென்று விசாரித்தேன். அங்கு, இந்த வீடு உள்ள ஏரியாவுக்கு பில் கலெக்டர் செல்லத்துரை என்பவரை பார்க்கும்படி சொன்னார்கள். அதன்பிறகு 2020 ஜூலை 2 வது வாரத்தில் பெரிய சேமூர் மாநகராட்சி அலுவலகத்தில் பில் கலெக்டர் செல்லத்துரை அவர்களை பார்த்து விபரம் கேட்டேன். அதற்கு அவர், முதலில் சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய வேண்டும் என்றும், அதன்பிறகுதான் குடிநீர் இணைப்புக்கு மனு கொடுக்கவேண்டும் என்றும் சொன்னார். எனவே பழைய சொத்துவரி பாக்கியை 8.7.2020ம் தேதி பழைய ஓனர் பெயரில் கட்டி அதற்கான ரசீதை பெற்றுக்கொண்டேன். அதன்பின்னர் 9.7.2020ம் தேதி சொத்துவரி பெயர்மாற்றம் கோரி பெரியசேமூர் அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்தேன். 2020ம் வருடம் அக்டோபர் 17ம் தேதி காலையில் பில்கலெக்டர் செல்லத்துரை சொன்னதின்பேரில் நான் E.P.B நகரில் உள்ள பாலாஜி பேக்கரிக்கு சென்று அவரை சந்தித்தேன். அப்போது அவர் சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய ரூ.12300/- ஆகும் என்று சொல்லி என்னிடம் பணம் ரூ.12300 ஐ வாங்கி கொண்டார்.

அப்போது எனது செல்போன் எண் 9976626989-யும் வாங்கிக்கொண்டார். அதன்பின்னர் ஒருவாரம் கழித்து என்னை அழைத்து சொத்துவரி பெயர்மாற்றம் செய்துவிட்டதாக சொல்லி அதற்கான ரசீதை என்னிடம் கொடுத்தார். அந்த ரசீதில் கட்டணமாக ரூ.1352/- இருந்தது. அதுபற்றி கேட்டபோது, இன்னும் வேலை இருக்கிறது என்றும், குடிநீர் இணைப்புக்கு பதிவு செய்ய ரூ.10000/- கொடுக்கவேண்டும் என்றும் கேட்டார். அப்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லாததால் நவம்பர் மாதம் தீபாவளி பண்டிகை கழித்து ரூ.10000/-ஐ கொண்டுபோய் பெரியசேமூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு முன்பாக வைத்து பில்கலெக்டர் செல்லதுரையிடம் கொடுத்தேன். அப்போது அவர் என்வீட்டுக்கு குடிநீர் இணைப்பு வழங்க அலுவலக அதிகாரிகளுக்கும், எனக்கும் மேலும் ரூ.15000/- கொடுக்கவேண்டும் என்று சொன்னார். நான் தொகை அதிகமாக இருக்கிறது என்று கேட்டதற்கு, புதிய குடிநீர் இணைப்புக்கு தான் ரூ.15000/- வாங்குவதாக சொன்னார். அதன்பின்னர் செல்லதுரை பலமுறை என்னை செல்போனில் கூப்பிட்டு, பணம் ரூ.15000/-ஐ கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டார். இந்த விபரத்தை என்மனைவி புனிதாவிடம் சொன்னபோது, அவர் 16.12.2020 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் என் மனைவி புனிதா அவரது செல்போனில் இருந்து பில்கலெக்டர் செல்லதுரையிடம் பேசினார். ஏற்கனவே ரூ.23500/- கொடுத்துவிட்டோம், மீண்டும் எதற்கு பணம் கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர், அதெல்லாம் வரிக்கும் பைல் ரெடிசெய்யவும் சரியாகிவிட்டது, எனக்கு ரூ.15000/- தனியாக கொடுத்தால்தான் உங்கள் வீட்டுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கமுடியும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அதன்பின்னர் செல்லதுரை பலமுறை என்னை செல்போனில் கூப்பிட்டு, பணம் ரூ.15000/-ஐ கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லாததால் 29.12.2020ம் தேதி மதியம் 2 மணியளவில் நான் பில்கலெக்டர் செல்லத்துரையை அவரது செல்போன் எண் 9360220839 கூப்பிட்டு பேசினேன். அவர் என்னை E.P.B நகர் மாரியம்மன் கோயில் அருகில் வரச்சொன்னார். நான் அவர் சொன்னபடி E.P.B நகர் மாரியம்மன் கோயில் அருகில் சென்று பார்த்தபோது, அவர் அங்கு இல்லை. எனவே எனது செல்போனில் இருந்து செல்லதுரையை கூப்பிட்டேன். அவர் போன் எடுக்கவில்லை. நான் காத்திருந்தேன். சிறிது நேரத்தில் செல்லதுரை நேரில் வந்து, என்னிடம் பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நான் என்னால் அவ்வளவு பணம் ரெடிபன்ன முடியவில்லை, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், உன்னுடைய வீட்டுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்க பணம் கட்டி பைல் ரெடியாக உள்ளது, நான் கேட்ட பணம் ரூ.15000/-ஐ கொடுத்தால் உடனடியாக குடிநீர் இணைப்பு கொடுத்துவிடுவதாக சொன்னார். மேலும் தான் வைத்திருந்த குடிநீர் இணைப்புக்கான 30.11.2020 தேதியிட்ட ரூ.8220/- மற்றும் ரூ.1290/-க்கான இரண்டு ரசீதுகளை என்னிடம் கொடுத்து, பைல் எல்லாம் பணம் கட்டி ரெடியாக இருக்கிறது, நீ எனக்கு கொடுக்கவேண்டிய

பணம் ரூ.15000/-ஐ கொடுத்தால் உடனடியாக உன்வீட்டுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்வதாக சொன்னார். எனக்கு அவசரமாக ஒரு பில்டிங் வேலை இருப்பதாகவும், எனவே 2021 ஜனவரி முதல் வாரத்தில் பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு, போனில் பேசிவிட்டு வந்துவிடுவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு யோசித்து பார்த்ததில் என் வீட்டுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க பெரிய சேமூர் மாநகராட்சி பில் கலெக்டர் செல்லதுரை அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15000/- கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்கும் பெரிய சேமூர் மாநகராட்சி அலுவலக பில் கலெக்டர் செல்லதுரை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX ( A.முரளி ) 5.01.21.

Sir, Received the above said computer typed complaint on 05.01.2021 at 09.45 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2021 u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 11.00 hrs today on 05.01.2021. Sd/- (xxxxxxxx) 05.01.2021 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.A.Murali, S/o.Annamalai, Thirumalai street, Veerapanchathiram, Erode is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

05.01.2021
(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.